மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : தனராஜ்
சாட்சி – வா.சா–5 நாள்: 05.11.2024

---

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் 4ம் வாதி என்றால் சரிதான். 1ம் வாதி எனது தாயார் என்றும், 3ம் வாதி எனது சகோதரர் என்றாலும் சரிதான். நான் எனது நிரூபன வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் எனது அம்மாவும் எனது சகோதரரும் அவர்களது சாட்சியத்தில் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது சாட்சியத்துடன், வா.சா.ஆ.11 ஆவணத்தை கூடுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் வா.சா.ஆ.11 ஆவணத்தை கூடுதலாக தாக்கல் செய்வதற்காகத் தான் எனது சாட்சியத்தை அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் செங்கத்துறைக்காரர் என்ற பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவரது தந்தை பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணம் 2007 ஆம் ஆண்டே வாங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. செங்கத்துறைக்காரர் என்ற நபரே கிடையாது என்றும் வருவாய்த்துறை ஆவணங்களில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதிகள் தான் சொத்திற்கு உரிமையாளர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கை திசை திருப்புவதற்காகவும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவும் காலதாமதமாக வா.சா.ஆ.11 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பொங்கியண்ணகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது. பொங்கியண்ணகவுண்டருக்கு ஆதியில் சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கான மூலப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 பாக சாசன

பத்திரத்தில் பொங்கியாகவுண்டர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொங்கியண்ணன் கவுண்டர் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 பாக சாசன பத்திரத்தில் பெ.மாரப்ப கவுண்டர் மற்றும் சி.மாரப்ப கவுண்டர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பெரிய மாரப்ப கவுண்டர் சின்ன மாரப்ப கவுண்டர் என்று குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பொங்கியா கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பெரிய மாரப்ப கவுண்டர் என்று குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

6. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மாரப்ப கவுண்டர் இறந்த இடம் ஒண்டிப்புதூர் கோவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொங்கியா கவுண்டர் மகன் பெரிய மாரப்ப கவுண்டர் வேலாயுதபாளையத்தில் தான் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. பெரிய மாரப்ப கவுண்டருக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும் நான் மற்றும் மற்ற வாதிகள் அவருடைய வாரிசுகள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7. பெரிய மாரப்ப கவுண்டர் இறந்த தேதி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல அவர் 23.08.1998 தேதியில் இறந்தார். பெரிய மாரப்ப கவுண்டர் நான் சொன்ன தேதியில் இறந்திருந்தால் நான் அவர் பெயர் குறிப்பிட்ட இறப்பு சான்றிதழை தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் பெரிய மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. பெரிய மாரப்ப கவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துதான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் நீதிமன்ற உத்தரவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் நான் வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பிறப்பு சான்றிதழ்களை உண்மை தெரிந்து விடும் என்பதால் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று தாக்கல் செய்துள்ளோம். வேறு என்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால், வேறு பரிகாரங்கள் கேட்கவில்லை. தாவா சொத்துக்கள்

எங்களது அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு எந்த வருவாய்த்துறை ஆவணங்களையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. நான் பிறந்து வளர்ந்தது ஒண்டிப்புதூர் தான். தற்போதும் அங்கு தான் வசித்து வருகிறேன். நாங்கள் எந்த காலத்திலும் தாவாசொத்தின் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சுவாதீனத்தில் உள்ளதாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. பெரிய மாரப்பகவுண்டருக்கு வாரிசுகள் யாரும் கிடையாது என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் அவரை கவனித்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியில்ல.

11. பெரிய மாரப்ப கவுண்டரின் சகோதரியின் கணவர் தான் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தந்தை மாரப்ப கவுண்டர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வேலாயுதம்பாளையத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 10.01.1977 தேதியில் பெரிய மரப்ப கவுண்டர், மாரப்ப கவுண்டருக்கு தாவா சொத்துக்களை விற்பனை செய்து விட்டார் என்றும் அன்றைய தேதி முதல் மாரப்ப கவுண்டர் தான் தாவாசொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரியில்ல. வா.சா.ஆ.1 பாகசாசன ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்து விவரத்தை தான் நான் இந்த தாவாவிலும் சொத்து விவரமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

12. தாவாசொத்தில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளது கட்டிடங்கள் உள்ளதா என்பதை பற்றிய விவரங்கள் எதையும் நான் தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தற்போதும் தாவாசொத்து பூமியாகத்தான் உள்ளது. நான் தாவாசொத்தில் அனுபவத்தில் இல்லாததால்தான் தாவா சொத்து விபரம் எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தின் தற்போதைய செக்குப்பந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாலைக்கு தென்புறம் தாவா சொத்து அமைந்துள்ளது. சின்னச்சாமி பூமிக்கும் மேற்கு மற்றும் தங்கவேல்சாமி விற்பனை செய்த பூமிக்கு கிழக்கு என்று உள்ளது.

13. தாவாசொத்தின் நீள அகலம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தினை மாரப்ப கவுண்டரும் அவரது வாரிசுகளும் தான் அனுபவித்து வருவதால் தாவா சொத்து பற்றிய முழு விபரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியில்ல. பெரிய மாரப்ப கவுண்டர் மாரப்ப கவுண்டருக்கு விற்பனை செய்த தேதி முதல்

எங்களுக்கு தெரிந்தே மாரப்ப கவுண்டரும் அவரது வாரிசுகளும் தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

14. எங்களுக்கும் பெரிய மரப்ப கவுண்டருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் பெரிய மாரப்பகவுண்டர் இறந்தபோது இறுதி சடங்குகளை மாரப்ப கவுண்டர் தான் செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை மாரப்ப கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகள் தான் அனுபவித்து வந்ததால் வருவாய் துறை ஆவணங்களில் அவர்களது பெயர்கள் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை.

15. பிரதிவாதிகளின் எதிர் வழக்குரைக்கு நாங்கள் எந்த பதிலுரையையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி அதற்கு வரி இனங்களை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் எனது அம்மாவும் சகோதரரும் தாக்கல் செய்த சாட்சிய வாக்குமூலத்தையே பொய்யான சங்கதிகள் உடன் தாக்கல் செய்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. தாவாசொத்தின் சொத்து விவரம் தவறாக உள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் தாவாசொத்தின் உரிமையாளர்கள் என்றும், எங்களுக்கும் தாவாசொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.11.05 16:59:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.